




admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்








| Vol: 04 | Issue: 025 | 4 Pages | 25.08.2026 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 04 | இதழ்: 025 | 4 பக்கங்கள் | 25.08.2026 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |




**யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்**
**சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு**

**விளக்கம்: காக்க வேண்டியவற்றுள் எவற்றைக் காக்காவிட்டாலும் நாவையாவது காக்கவேண்டும்; காக்கத் தவறினால் சொற் குற்றத்தில் அகப்பட்டுத் துன்புறுவர்.**

# சென்னையில் 2ம் கட்டமாக 750 ஏ.சி. மின்சார பஸ்கள் முதல்அமைச்சர் விஜய் இன்று தொடங்கி வைக்கிறார்

சென்னை, ஆக. 25


சென்னையில் 2ம் கட்டமாக 750 ஏ.சி. மின்சார பஸ் சேவையை முதல் அமைச்சர் விஜய் இன்று (செவ்வாய்கிழமை தொடங்கி வைக்கிறார். சென்னையில் சுற்றுச்சூழல் மாசுபாட்டைக் குறைக்கும் நோக்கத்தில், சென்னை மாநகர போக்குவரத்து கழகத்தின் சார்பில் முதல் கட்டமாக ரூ.697 கோடி மதிப்பீட்டில் 625 தாழ்தள மின்சார பஸ்கள் வியாசர்பாடி, பெரும்பாக்கம், பூந்தமல்லி,



சென்டிரல் பணிமனை மற்றும் தண்டையார்பேட்டை1 ஆகிய 5 பணிமனைகளில் இருந்து இயக்கப்பட்டு வருகிறது.

அதனைத் தொடர்ந்து, 2ம் கட்டமாக 750 புதிய தாழ்தள குளிர்சாதன மின்சார பஸ்கள் ஆலந்தூர், சென்டிரல் பணிமனை2, பெரம்பூர், பாடியநல்லூர், ஆவடி, கே.கே.நகர் மற்றும் அய்யப்பன்தாங்கல் ஆகிய 7 பணிமனைகளில் இருந்து இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## நியூசிலாந்தில் 16 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் சமூக வலைதளங்களை பயன்படுத்த தடை



வெலிங்டன், ஆக. 25

நியூசிலாந்தில் 16 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் சமூக வலைதளங்களை பயன்படுத்துவதற்கு தடை விதிக்க அந்நாட்டு பிரதமர் கிறிஸ்டோபர் லக்சன் புதிய சட்ட முன்மொழிவை கொண்டு வந்துள்ளார். இளம் தலைமுறையினருக்கு சமூக வலைதளங்களால் ஏற்படும் பாதிப்புகளை தடுப்பதே இதன் நோக்கம் என்றார்.

இன்ஸ்டாகிராம், டிக்டாக், பேஸ்புக் போன்ற தளங்களில் பயனர்களின் வயதை உறுதிப்படுத்த நிறுவனங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். விதிகளை மீறும் நிறுவனங்களுக்கு அவற்றின் உலகளாவிய வருவாயில் 10 சதவீதம் அபராதம் விதிக்கப்படும். எனினும், ஆளும் கூட்டணியில் உள்ள மற்ற கட்சிகள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளன. அக்டோபர் 1ந்தேதிக்குள் இந்த மசோதாவை நிறைவேற்ற போதிய கால அவகாசம் இல்லை. எதிர்க்கட்சிகளின் ஆதரவு கிடைப்பதிலும் சிக்கல் உள்ளதால், இந்த சட்டத்தை நிறைவேற்றுவதில் தொடர்ந்து இழுபறி நீடிக்கிறது.

## தென் ஆப்பிரிக்கா: முன்னாள் குத்துச்சண்டை வீரர் சொலனி டெட்டே சுட்டு கொல்லப்பட்ட வழக்கில் 4 பேர் கைது



தென்னாப்பிரிக்கா, ஆக. 25

தென்னாப்பிரிக்காவில் முன்னாள் உலக சாம்பியன் குத்துச்சண்டை வீரர் சொலனி டெட்டே சுட்டு கொல்லப்பட்ட வழக்கில் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கிழக்கு கேப் மாகாணத்தில் மாண்ட்சேன் பகுதியை சேர்ந்தவர் சொலனி டெட்டே(வயது 38). இவர் குத்துச்சண்டைப்போட்டியில்2முறைஉலகசாம்பியன்பட்டம்வென்றுள்ளார். 2017ம் ஆண்டு சிபோனிசோ கோன்யாவுக்கு எதிரான போட்டியை வெறும் 11 வினாடிகளில் வென்று, அதிவேக நாக் அவுட் செய்த குத்துச்சண்டை வீரர் என்ற கின்னஸ் உலக சாதனையையும் படைத்தார். இவர் 2022 ஆண்டு வரை குத்துச்சண்டை போட்டிகளில் விளையாடி பின்னர் ஓய்வை அறிவித்தார். சொலனிடெட்டேகடந்தவெள்ளிக்கிழமைஇரவுகிழக்குகேப்மாகாணத்தில் மாண்ட்சேனில் உள்ள தனது வீட்டிற்கு காரில் காதலியுடன் சென்றுள்ளார். வீட்டின்கதவுதிறப்பதற்காககாரில்காத்திருந்தார். அப்போது அங்கு பைக்கில் முகமூடி அணிந்து வந்த மர்ம நபர்கள் காரில் இருந்த இருவர் மீதும் பலமுறை துப்பாக்கி சூடு நடத்தினர். இதில் இருவரும் பலத்த காயமடைந்து, சொலன் டெட்டே சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். அவரது காதலியைசம்பவஇடத்திற்குவிரைந்துசென்றபோலீசார்மீட்டுசிசிச்சைக்காக ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். சொலனி டெட்டேவின் உடலை பிரேத பரிசோதனைக்காக அனுப்பினர்.

இது குறித்து தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்ட போலீசார் முக்கிய குற்றவாளியான 22 வயதுடைய நபரை சனி கிழமை கைது செய்து கொலை மற்றும் கொலை முயற்சி வழக்கில் இன்று மாண்ட்சேன் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். மேலும், இது தொடர்பாக சந்தேகப்பட்ட நபர்கள் 27,27,மற்றும் 28 வயதுடைய நபர்களை ஞாயிற்றுக்கிழமை அன்று கைது செய்தனர். இவர்கள் மூவரையும் நாளை அதே மாண்ட்சேன் நீதி மன்றத்தில் ஆஜர்படுத்த உள்ளனர். மேலும் இந்த கொலை தொடர்பாக வேறு யாருக்கும்தொடர்புஉள்ளதாளனபோலீசார்விசாரணைசெய்துவருகின்றனர். இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## அமெரிக்காவில் பட்டப்படிப்புகளுக்கு விண்ணப்பிக்கும் இந்திய மாணவர்களின் எண்ணிக்கை சரிவு



வாஷிங்டன், ஆக. 25

இந்தியாவை சேர்ந்த லட்சக்கணக்கான மாணவர்கள் இளநிலை, முது நிலை பட்டப்படிப்புகளை அமெரிக்கா, ரஷியா போன்ற வெளிநாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களில் பயின்று வருகின்றனர்.

குறிப்பாக, அமெரிக்காவில் உள்ள பல்கலைக்கழகங்களில் கடந்த கல்வியாண்டில் 3.63 லட்சம் இந்திய மாணவ, மாணவியர்சேர்ந்துள்ளனர். அமெரிக்காவில்படிக்கும்வெளிநாட்டு மாணவ, மாணவியருக்கு கல்வி பயிலும் காலம் நிறைவடைந்து கூடுதலாக 2 ஆண்டுகள் வரை மாணவர் விசா காலம் நீட்டிப்பு வழங்கப்படும். அந்த காலத்தில் மாணவர்கள் தங்கள் விசாவை ஹெச். ஒன். பி. விசாவாக மாற்றிக்கொள்ளலாம் என்ற வாய்ப்பு இருந்தது. ஆனால், மாணவர் விசாவில் வந்தவர்கள் படிப்பு நிறைவடைந்து அமெரிக்காவில் கூடுதலாக காலம் தங்கி இருக்க வழங்கப்படும் சலுகைக்கு இனி 1 லட்சம் டாலர்கள் கட்டணம் வசூலிக்க அமெரிக்க அரசு திட்டமிட்டு வருகிறது.

இந்நிலையில், நடப்பு ஆண்டில் அமெரிக்காவில் பட்டப்படிப்புகளுக்கு விண்ணப்பிக்கும்இந்தியமாணவர்களின்எண்ணிக்கைசரிவைசந்தித்துள்ளது. கடந்த ஆண்டை ஒப்பிடும்போது நடப்பு ஆண்டில் அமெரிக்காவில் பட்டப்படிப்புகளுக்குவிண்ணப்பிக்கும்இந்தியமாணவர்களின்எண்ணிக்கை 15சதவீதம் குறைந்துள்ளது. விசாநடைமுறையில் அமெரிக்காகொண்டுவந்த மாற்றமே இந்திய மாணவர்களின் விண்ணப்பம் குறைந்ததற்கு காரணம் என தகவல் வெளியாகியுள்ளது.

## மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் 'நைரா'வை அறிமுகப்படுத்துகிறது - இயற்கையான ரத்தின கற்கள் பதிக்கப்பட்ட நகைகளின் புதிய கலெக்சன்




சென்னை ஆக.25

உலகின் நான்காவது மிகப்பெரிய *jewellery retailer* மற்றும் *'The Responsible Jeweller'* என அறியப்படும் *Malabar Gold & Diamonds*, *'Nayraa – Nature's Finest Gem stones, Crafted into Timeless Masterpieces'* என்ற புதிய இயற்கையான ரத்தின கற்கள் பதிக்கப்பட்ட நகைகளின் நகை கலெக்சனை அறிமுகப்படுத்தியுள்ளது. பிரபல நடிகையும் மாடலுமான ஸ்ரீநிதி ஷெட்டி இந்த கலெக்சனின் முகமாக இடம் பெற்றுள்ளார். ஆந்திரப்பிரதேசம், தெலங்கானா, தமிழ்நாடு மற்றும்கர்நாடகா ஆகிய மாநிலங்களில் நடைபெறும் *Gemstone Jewellery Festival*ன் முக்கிய அம்சமாக *'Nayraa'* கலெக்சன் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்தவிழாவின்ஒருபகுதியாக, வாடிக்கையாளர்கள் *gemstone & uncut jewellery* மீது சேதாரத்தில் 25% வரைதள்ளுபடி பெறலாம். இந்த சலுகை 14 *September* 2026 வரை செல்லுபடியாகும். இயற்கையின் அரிய ரத்தினங்களின் நீடித்த அழகால் ஈர்க்கப்பட்டுள்ள *'Nayraa'* கலெக்சன், பாரம்பரிய *Chillai* மற்றும் *Pachi craftsmanship* ஆகியவற்றிலிருந்து உத்வேகம் பெற்றுள்ளது. தங்கத்தில் வடிவமைக்கப்பட்டு, விலைமதிப்புமிக்க இயற்கையான ரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ள இந்தத் தொகுப்பு, சிற்ப வடிவங்கள் மற்றும் நுணுக்கமான வேலைப்பாடுகளை ஒருங்கிணைத்து, பாரம்பரிய ரத்தின நகைகளுக்கு புதிய பரிமாணத்தை வழங்குகிறது.

## பூந்தமல்லி: அரசு பள்ளியில் காலை உணவு சாப்பிட்ட மாணவர்களுக்கு வாந்தி மயக்கம்

சென்னை, ஆக. 25

பூந்தமல்லி அருகே உள்ள ஒரு அரசுப் பள்ளியில் காலை வழங்கப்பட்ட பொங்கல் உணவைச் சாப்பிட்ட 17 மாணவர்களுக்குதிடீரெனவாந்தி, மயக்கம்மற்றும்தலைசுற்றல் ஏற்பட்டதால், அவர்கள் அவசரமாக அரசு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சென்னை, பூந்தமல்லி அருகே உள்ள அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ் வழக்கம் போல பொங்கல் வழங்கப்பட்டது. மாணவர்கள்அந்தஉணவைச்சாப்பிட்டுக்கொண்டிருந்தபோது, ஒரு மாணவனின் தட்டில் இருந்த பொங்கலில் பல்லி ஒன்று கிடப்பதைக் கண்டு ஆசிரியர்கள் அதிர்ச்சியடைந்தனர்.

இதையடுத்து உடனடியாக உணவு விநியோகம் நிறுத்தப்பட்டது. அதற்குள் உணவைச் சாப்பிட்ட 17 மாணவர்களுக்கு அடுத்தடுத்து வாந்தி மற்றும் மயக்கம் ஏற்பட்டது. பள்ளி நிர்வாகத்தினர் உடனடியாக மாணவர்களை மீட்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் அருகில் உள்ள பூந்தமல்லி அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களுக்கு மருத்துவர்கள் தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர். தற்போது மாணவர்களின் உடல்நிலை சீராக உள்ளதாகவும், அவர்கள் தொடர்ந்து மருத்துவர்களின் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளதாகவும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இச்சம்பவத்தை அறிந்த பெற்றோர்கள் பதற்றத்துடன் ஆஸ்பத்திரியில் குவிந்து வருகின்றனர்.

இச்சம்பவம்குறித்ததகவல்பரவியதும், உணவுப்பாதுகாப்புத் துறை அதிகாரிகள் மற்றும் கல்வித்துறை அதிகாரிகள் பள்ளிக்கு விரைந்து சென்று விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, அந்த குறிப்பிட்ட மைய சமையல் கூடத்திலிருந்து மற்ற பள்ளிகளுக்கு அனுப்பவிருந்த காலை உணவுகளும் உடனடியாக நிறுத்தப்பட்டன.

சமையல் கூடத்தில் இருந்த உணவின் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, ஆய்வக சோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளன. மாணவர்களின் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் வகையில் அலட்சியமாகச் செயல்பட்ட சமையல் ஊழியர்கள் மற்றும் பொறுப்பாளர்கள் மீது துறை ரீதியான கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர். இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பையும், பெற்றோர்களிடையே அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது

## புது வண்ணாரப்பேட்டையில் வடசென்னை மலையாளிகள் அசோசியேசன் சார்பில் ஓணம் விழா



சென்னை புது வண்ணாரப்பேட்டை ஐயப்பன் கோயிலில் வடசென்னை மலையாளிகள் அசோசியேசன் சார்பில் 2026ஆம் ஆண்டுக்கான ஓணம் விழா சிறப்பாக நடைபெற்றது. விழாவையொட்டி கோயில் வளாகத்தில் பாரம்பரிய முறையில் அத்தப்பூ கோலம் அமைக்கப்பட்டது. இதில் ஏராளமான மலையாளிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு ஓணம் பண்டிகையை உற்சாகமாக கொண்டாடினர். விழாவில் மகாபலி ராஜா வேடமணிந்தவர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு அனைவருக்கும் ஓணம் வாழ்த்துகளை தெரிவித்தார். மகாபலி ராஜா தங்கள் மக்களை ஆண்டுக்கு ஒருமுறை சந்தித்து, ஊர் மக்கள் அனைவரும் நலமாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்க வேண்டும் என வாழ்த்துவதாக விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். மேலும், கேரளாவில் இருந்து கொண்டு வரப்பட்ட பாரம்பரிய பொருட்கள் மற்றும் தமிழகத்தில் வசிக்கும் மலையாளிகள் பயன்படுத்தும் பல்வேறு பொருட்கள் விழா வளாகத்தில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்தன. இதனை பொதுமக்கள் ஆர்வத்துடன் வாங்கிச் சென்றனர். ஓணம் பண்டிகையின் பின்னணியில் மகாபலி மன்னரின் வரலாற்று மற்றும் புராணக் கதை முக்கியத்துவம் பெற்றுள்ளது. ஐதீகத்தின்படி, வாமன அவதாரத்தில் வந்த திருமால் மகாபலி மன்னரிடம் மூன்றடி நிலம் கேட்டதாகவும், பின்னர் மகாபலி மன்னர் ஆண்டுக்கு ஒருமுறை தனது மக்களை சந்திக்க வர வேண்டும் என வரம் கேட்டதாகவும் கூறப்படுகிறது. அந்த வரம் வழங்கப்பட்டதாக நம்பப்படுகிறது. இதனை நினைவுகூரும் வகையில் மலையாள மக்கள் ஆண்டுதோறும் ஓணம் பண்டிகையை பாரம்பரியமாக கொண்டாடி வருகின்றனர். இந்த ஆண்டும்புதுவண்ணாரப்பேட்டையில் நடைபெற்ற ஓணம் விழாவில் மலையாள மக்கள் ஒன்று கூடி, பாரம்பரிய நிகழ்ச்சிகளுடன் மகிழ்ச்சியாக கொண்டாடினர்.

## பட்டாசுகள் வெடித்து, இனிப்புகள் வழங்கி முதல்வருக்கு நன்றி தெரிவித்த பரந்தூர் விமான நிலைய திட்ட எதிர்ப்பு போராட்டக்குழுவினர்



பரந்தூர் புதிய விமான நிலைய திட்டத்தை முழுமையாக கைவிடுவதாக தமிழ்நாடு சட்டமன்றத்தில் முதலமைச்சர் சி.ஜோசப் விஜய் அவர்கள் அறிவித்ததை தொடர்ந்து, ஏகனாபுரம் கிராம மக்கள் பட்டாசுகள் வெடித்தும், இனிப்புகள் வழங்கியும் கொண்டாடினர். பரந்தூர் விமான நிலைய திட்டத்தை எதிர்த்து ஏகனாபுரம் கிராம மக்கள் சுமார் 1,150 நாட்களுக்கும் மேலாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். இந்நிலையில், விமான நிலைய திட்டம் கைவிடப்படுவதாக முதலமைச்சர் அறிவித்தது தங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிப்பதாக போராட்டக்குழுவினர் தெரிவித்தனர். இதையடுத்து ஏகனாபுரம் கிராமத்தில் உள்ள டாக்டர் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். பின்னர், முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்து பட்டாசுகள் வெடித்தும், பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கியும் தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். இந்த நிகழ்ச்சியில் பரந்தூர் புதிய விமான நிலைய திட்ட எதிர்ப்பு போராட்டக்குழு தலைவர் ஜி.சுப்பிரமணியன், செயலாளர் எஸ்.டி.கதிரேசன் உள்ளிட்ட நிர்வாகிகள், விவசாயிகள் மற்றும் கிராம பொதுமக்கள்பலர்கலந்துகொண்டனர்.

தினகனி



# அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் 10 பேர் த.வெ.க.வில் இணைய உள்ளனர்!

## அமைச்சர் செங்கோட்டையன் பரபரப்பு பேச்சு!!

கோபி,ஆக 24

ஈரோடு மாவட்டம் கோபியில் த.வெ.க. சார்பில் 100 நாள் சாதனை விளக்க பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு வருவாய்த்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் பேசினார். அவர் கூறியதாவது:

தமிழக முதல்அமைச்சர் விஜய் சிறப்பாக ஆட்சி நடத்தி வருகிறார். இதே இடத்தில் தேர்தலின் போது செங்கோட்டையன் நடமாட முடியுமா? என்று ஒருவர் கேட்டார். தற்போது அவர் சட்டமன்றத்தில் எனக்கு எதிர்திசையில் அமர்ந்துள்ளார். தமிழகத்தில் யார் வெற்றி பெறுவார்கள் என்பதை என்னால் கணிக்க முடியும். அதனால் தான் த.வெ. க.வில் முதல் அமைச்சர் விஜய் முன்பு இணைந்தேன். அப்போது என்னை பலர் இவர் இந்த கட்சியில் சேர்ந்துவிட்டாரே என பேசினார்கள்.

11 முறை தேர்தலில் தோல்வி கண்டவருக்கு என்ன தெரியும்? விஜய் இருக்கும் வரை அவர்தான் தமிழகத்தில் நிரந்தர முதல் அமைச்சர். அனைத்து எம்.எல்.ஏ.க்களுக்கும் கார் கொடுப்பதாக முதல் அமைச்சர் கூறியுள்ளார். அதற்கு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் எங்கள் கட்சி எம்.எல்.ஏ.க்களுக்கு கார் வேண்டாம் என கூறியுள்ளார். அரசு கொடுக்கின்ற காரில் சென்றால் தான் பொதுமக்களிடம் மதிப்பு அதிகரிக்கும். அ.தி.மு.க.வில் 47 எம்.எல்.ஏ.க்கள் தான் உள்ளனர். அதில் இன்னும் 10 பேர் எங்கள் த.வெ.க. கட்சியில் இணைய உள்ளனர். மீதி உள்ளவர்களும் இன்னும் 6 மாதங்களில் வந்துவிடுவார்கள். அதன் பின்னர் அ.தி.மு.க. பூஜ்ஜியமாகிவிடும். இதை நான் சொல்லவில்லை. கட்சியில் இருப்பவர்கள் என்னிடம் கூறி வருகின்றனர். எடப்பாடி பழனிசாமி இருக்கும் வரை அ.தி.மு.க. வெற்றி பெறாது.

இவ்வாறு அவர் கூறினார்.





# கோவையில் ஈஷா கிராமோத்சவ விளையாட்டு போட்டிகள்!

## கனிமொழி சந்தோஷ் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!!

கோவை,ஆக 25

ஈஷா சார்பில் நடத்தப்படும் 'ஈஷா கிராமோத்சவம்' 2026 விளையாட்டுத் திருவிழாவின் கோவை மண்டல அளவிலான போட்டிகள் கொங்குநாடு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் சிறப்பாக நடைபெற்றன.

தமிழ்நாட்டில் கோவை, சேலம், வேலூர், கடலூர், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய 6 இடங்களில் இன்று மண்டல அளவிலான போட்டிகள் நடைபெற்றன.

இதில் கோவையில் நடைபெற்ற போட்டிகளை கவுண்டம்பாளையம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கனிமொழி சந்தோஷ் மற்றும் கொங்குநாடு கல்லூரியின் செயலாளர் வாசுகி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டு தொடங்கி வைத்தனர். இதில் முதற்கட்ட கிளஸ்டர் போட்டிகளில் வெற்றி பெற்ற ஆயிரக்கணக்கான கிராமப்புற விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கேற்றனர்.

கனிமொழி சந்தோஷ் பேசுகையில், "சமூகத்தில் பலரும் பல்வேறு சங்கங்களையும் இயக்கங்களையும் தொடங்குகிறார்கள். ஆனால், அவற்றைத் தொய்வின்றித் தொடர்ந்து நடத்துவது இல்லை. ஒரு நிகழ்வைத் தொடர்ந்து நடத்துவது என்பது மிகப்பெரிய மற்றும் கடினமான செயலாகும். ஆனால், ஈஷாவிடம் நான் கண்ட ஒரு முக்கியச் சிறப்பு அவர்களின் ஒருங்கிணைப்புத் திறன் மற்றும் அர்ப்பணிப்பு ஆகும். 18 ஆண்டுகளாக இளைஞர்களுக்காகவும் மக்களுக்காகவும் ஒரு சமூக நோக்கத்தோடு ஈஷா கிராமோத்சவத்தை தொடர்ந்து நடத்துவது என்பது மிகப்பெரிய செயலாகும். தமிழ்நாடு மற்றும் புதுவையில் கிளஸ்டர் அளவிலான முதற்கட்ட போட்டிகள் 70க்கும் மேற்பட்ட இடங்களில் இம்மாத முதல் 2 வாரங்களில் நடைபெற்றது. தற்போது மண்டல அளவிலான போட்டிகள் நடைபெற்றுள்ளன. இதனைத் தொடர்ந்து பிரம்மாண்ட இறுதிப்போட்டி செப்டம்பர் 6 அன்று கோவை ஆதியோகி வளாகத்தில் சத்குருவின் முன்னிலையில் நடைபெறும்.

ஈஷா கிராமோத்சவம் 2026இன் இறுதிப் போட்டியில் வெல்லும் கைப்பந்து மற்றும் எறிபந்து அணிகளுக்கு தலா ரூ. லட்சமும், இரண்டாம் இடத்திற்கு ரூ.3 லட்சமும் பரிசாக வழங்கப்படும். மூன்று மற்றும் நான்காம் இடங்களைப் பிடிக்கும் அணிகளுக்கு முறையே ரூ.லட்சமும், ரூ.50,000மும் வழங்கப்படும். மாற்றுத் திறனாளிகளுக்கான போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெறும் அணிகளுக்கு சிறப்பு பரிசுகள் வழங்கப்படும். இந்த விளையாட்டுத் திருவிழாவில், கிராமப்புற இளைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் மொத்தம் ரூ.கோடிக்கும் மேல் பரிசுத்தொகை வழங்கப்படுகிறது.

இந்த மாபெரும் விளையாட்டுத் திருவிழாவில், சுமார் 7,005 அணிகள் மூலம் 40,000க்கும் மேற்பட்ட கிராமங்களில் இருந்து கிட்டத்தட்ட 20,000 பெண்கள் உட்பட 80,352 கிராமப்புற மக்கள் பங்கேற்றுள்ளனர்.

# வங்கதேசத்தில் இந்து குடும்பத்தை சேர்ந்த 4 பேர் கொலை!

டாக்கா, ஆக.25–

வங்கதேசத்தில் இந்து குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் கொடூரமாக கொலை செய்யப்பட்டு உள்ளனர்.

வங்கதேசத்தின் ரங்க்பூரை சேர்ந்த ஓய்வு பெற்ற ஆசிரியர் கணபதி சக்கரவர்த்தி (வயது 65). இவரது மனைவி பிரீத்தி லதா (வயது 50). இத்தம்பதியின் மூத்த மகள் அகாமி (வயது23). இளைய மகள் பிரியம் (12) கடந்த சில நாட்களாக அவரது வீடு வெளிப்புறமாக பூட்டப்பட்டு இருந்தது. உறவினர்கள் மொபைல் போனில் தொடர்பு கொள்ள முயன்றனர். ஆனால் அனைவரின் மொபைல் போன்களும் அணைக்கப்பட்டு இருந்தன.

இதுகுறித்து உள்ளூர் மக்கள், உறவினர்கள் போலீசில் புகார் அளித்தனர். இதன்பேரில் போலீசார் நேற்று முன்தினம் இரவு கணபதியின் வீட்டுக்கு சென்றனர். வெளிப்புற பூட்டை உடைத்து வீட்டுக்குள் நுழைந்தனர். அங்கு தூக்கில் தொடங்கிய நிலையில் கணபதியின் உடல் மீட்கப்பட்டது. மற்ற மூவரும் ஆங்காங்கே சடலமாக கிடந்தனர்.

இதுகுறித்து ரங்க்பூர் போலீஸ் கமிஷனர் முகமது அப்துல் மபூத் கூறியதாவது:–

கடந்தவியாழக்கிழமைஇரவுகணபதிசக்கரவர்த்தியின் வீட்டு மாடிக்கு முக்தோ மற்றும் சித்தார்த்தா ஆகியோர் சென்று உள்ளனர். இரு இளைஞர்களும் சேர்ந்து மாடியில் போதைப் பொருளை உட்கொண்டு ஆடல், பாடலில் ஈடுபட்டு உள்ளனர். மொட்டை மாடியில் யாரோ நடமாடுவதை உணர்ந்த கணபதி தனியாக மாடிக்குச் சென்றுள்ளார். அங்கு இருவர் போதையில் மிதப்பதை பார்த்து அவர்களை கடுமையாக கண்டித்து உள்ளார்.

இதனால் ஆத்திரமடைந்த முக்தோவும், சித்தார்த்தாவும் ஒரு துண்டால் கணபதியின் கழுத்தை இறுக்கி கொலை செய்துள்ளனர். கணவரின் அலறல் கேட்டு மனைவி பிரீத்தி லதா மொட்டை மாடிக்குச் சென்றுள்ளார். இருஇளைஞர்களும்சேர்ந்து, அவரையும் துண்டால் கழுத்தை இறுக்கி கொலை செய்துள்ளனர். பின்னர் கணபதியின் மகள், மகனையும் இதே பாணியில் கொலை செய்துவிட்டு அங்கிருந்து தப்பியோடிவிட்டனர். தீவிர விசாரணைக்குப்பிறகு இருவரையும் கைது செய்துள்ளோம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



# சேலம் நுகர்வோர் நீதிமன்ற மாற்றத்தை கண்டித்து வழக்கறிஞர்கள் நீதிமன்ற புறக்கணிப்பு போராட்டம்!

சேலம் ஆக 25

சேலம் அஸ்தம்பட்டி அருகே உள்ள சேலம் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் செயல்பட்டு வரும் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தை, நாமக்கல் மாவட்டத்திற்கு இடமாற்றம் செய்வதை கண்டித்து, இன்று சேலம் ஒருங்கிணைந்த மாவட்ட வழக்கறிஞர்கள் சங்கத்தைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள்,

நேற்று திங்கட்கிழமை காலை நீதிமன்ற புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்,

இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழக அரசு எடுத்திருக்கும் இந்த அதிரடி முடிவை உடனடியாக வாபஸ் பெற வேண்டும், அரசின் இந்த முடிவினால் 50 கிலோமீட்டர் தாண்டி உள்ள நீதிமன்றத்திற்கு வழக்கறிஞர்கள் வழக்குக்காக செல்வது மிகவும் கடினமான ஒன்று, இதனால் வழக்கறிஞர்கள் மட்டுமல்ல, பொது மக்களும் பாதிப்படைந்து மன உளைச்சலுக்கு ஆளாகும் நிலைமை ஏற்படுவதால், தமிழக அரசு உடனடியாக இதன் முடிவை கைவிட வேண்டும். தமிழக அரசு தங்களது கோரிக்கையை ஏற்று முடிவை கைவிடவில்லை என்றால், விரைவில் அடுத்த கட்ட மிகப்பெரிய போராட்டம் மாவட்ட முழுவதிலும் பெரிய அளவில் நடைபெறும் என, மாவட்ட வழக்கறிஞர்கள் தெரிவித்துள்ளனர்.

வழக்கறிஞர்களின், இந்த திடீர் போராட்டத்தால்நீதிமன்றநுழைவாயில் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. நுகர்வோர் நீதிமன்ற வழக்கறிஞர் பிரிவு தலைவர் செல்வம் தலைமையில் நடைபெற்ற போராட்டத்தில் 100க்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர்.

# காங்கயத்தில் நகை பறிப்பில் ஈடுபட்ட 2 பேர் குண்டாசில் கைது!

திருப்பூர்,ஆக 25

காங்கயத்தில் நகைப் பறிப்பு வழக்கில் 2 பேர் மீது குண்டர் தடுப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டனர்.

காங்கயம் கோவை சாலையில் கடந்த ஜூலை மாதம் தனியாகச் சென்ற பெண்ணிடம் 6 பவுன் நகைப் பறித்த வழக்கில் திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் பகுதியைச் சேர்ந்த தலிப்ராஜா (36), நத்தம் பகுதியைச் சேர்ந்த ஷாகுல் ஹமீது (37) ஆகியோரை காங்கயம் போலீஸார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இந்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட 2 பேரும் பல குற்றச் சம்பவங்களில் தொடர்ந்து ஈடுபட்டது தெரியவந்தது. இதையடுத்து, இருவரையும் குண்டர் தடுப்புச் சட்டத்தில் கைது செய்ய திருப்பூர் மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டதைத் தொடர்ந்து, அதற்கான உத்தரவை கோவை சிறையில் அடைக்கப்பட்டுள்ள 2 பேரிடமும் காங்கயம் போலீஸார் வழங்கினர்.



# ராக்கெட், செயற்கைக்கோள் தயாரிப்பை தனியாரிடம் ஒப்படைக்க இஸ்ரோ முடிவு!

## தேசிய விண்வெளி ஊக்குவிப்பு மையம் தகவல்!!

சென்னை, ஆக.25

ராக்கெட், செயற்கைக்கோள் தயாரிப்பை தனியாரிடம் ஒப்படைக்க இஸ்ரோ முடிவு செய்துள்ளதாக

தேசிய விண்வெளி ஊக்குவிப்பு மையம்தெரிவித்துள்ளது.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ), ராக்கெட்டுகள் மற்றும் வழக்கமான செயற்கைக்கோள்கள் தயாரிக்கும் பணியிலிருந்து விலகி, அவற்றை முழுமையாகத் தனியார் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களிடம் ஒப்படைக்கத் திட்டமிட்டுள்ளது.

இந்திய விண்வெளித் துறையைத் தனியாருக்குத் திறந்துவிடும் கொள்கையின் கீழ், தயாரிப்புப் பணிகளைத் தனியாரிடம் வழங்கிவிட்டு, இஸ்ரோ தனது முழு கவனத்தையும் புதிய ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு திட்டங்களில் செலுத்த முடிவு செய்துள்ளது.

சிறிய செயற்கைக்கோள்களை ஏந்திச் செல்லும் 'எஸ்.எஸ்.எல்.வி' ராக்கெட் தயாரிப்புத் தொழில்நுட்பத்தை தனியார் நிறுவனங்களுக்கு வழங்குவதன் மூலம் இந்த மாற்றம் தற்போது தொடங்கியுள்ளது. எஸ்.எஸ்.எல்.வியைத் தொடர்ந்து, இஸ்ரோவின் நம்பிக்கைமிக்க பி.எஸ்.எல்.வி மற்றும் பிரம்மாண்டமான எல்.வி.எம்3 ஆகிய ராக்கெட்டுகளின் தயாரிப்பும் அடுத்தகட்டமாகத் தனியார் அமைப்புகளிடம் ஒப்படைக்கப்பட உள்ளது.

இது குறித்து இந்திய தேசிய விண்வெளி ஊக்குவிப்பு மற்றும் அங்கீகார மையத்தின் தலைவர் பவன் கோயங்கா கூறியதாவது:–

இந்திய விண்வெளித் துறையை உலகளவில் விரிவுபடுத்தவும், ராக்கெட் உற்பத்தியை வேகப்படுத்தவும் இதற்கான முதற்கட்டப் பணிகள் ஏற்கனவே வெற்றிகரமாகத் தொடங்கிவிட்டன. இவ்வாறு அவர் கூறினார்.

# தேயிலை தோட்டத்தில் காட்டு யானைகள் முகாம்!

## தொழிலாளர்கள் அச்சம்!!



நீலகிரி,ஆக 25

நீலகிரி மாவட்டம் குன்னூர் அருகே கொலக்கம்பை பகுதியில் காட்டு யானைகள் நடமாட்டம் அதிகமாக உள்ளது. அப்பகுதியில் உள்ள தேயிலை தோட்டங்களுக்குள் புகுந்து, அங்குள்ள பலா மரங்களில் இருக்கும் பலாப்பழங்களை பறித்து தின்று வருகின்றன. இந்தநிலையில் கொலக்கம்பை, கிளிஞ்சடா பகுதிகளில் உள்ள தேயிலை தோட்டங்களுக்குள் 6 காட்டு யானைகள் முகாமிட்டன. இதனால் அப்பகுதி மக்கள், தோட்ட தொழிலாளர்கள் அச்சமடைந்தனர். இந்த வழியாக ஏராளமான வாகனங்கள் சென்று வருகின்றன. சாலையோரம் அல்லது தேயிலை தோட்டங்களில் யானைகளை காணும் பொது மக்கள்மற்றும்சுற்றுலாபயணிகள்வாகனங்களைநிறுத்தி செல்பி மற்றும் புகைப் படம் எடுப்பதற்காக யானைகள் அருகே சென்று சத்தம் எழுப்புவது உள்ளிட்ட செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர். தகவல் அறிந்த வனத்துறையினர் அப்பகுதியில் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும் அவர்கள், தேயிலை தோட்ட தொழிலாளர்கள் கவனமுடன் செல்ல வேண்டும் என்றும், யானைகளை பார்த்த உடனே வனத்துறைக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என்று அறிவுறுத்தி உள்ளனர்.




ஐரோப்பிய நாடான பிரான்சின் புஸ்ஸி செயின்ட் ஜார்ஜ் பகுதியில் அடுத்த மாதம் செப்டம்பர் 2ம் தேதி திறப்பு விழாவுக்கு தயாராக உள்ள பிரமாண்ட ஹிந்து கோவிலை படத்தில் காணலாம்.




புதுடில்லியில் நடைபெற்ற உலக பாட்மின்டனில் வென்ற வெண்கலப்பதக்கத்துடன் இந்தியாவின் காயத்ரி,திரீசா.

# செந்தில் நகர் ஸ்ரீ மஹா மாரியம்மன் கோயில் கும்பாபிஷேகம் விழா!





தருமபுரி ,ஆக 25

தருமபுரி மாவட்டம், இலக்கியம்பட்டி ஊராட்சி செந்தில் நகரில் எழுந்தருளியுள்ள அருள் மிகு ஸ்ரீ செல்வ விநாயகர், ஸ்ரீ செந்தில் பாலமுருகன், ஸ்ரீ நவகிரகங்கள், ஸ்ரீ நாகர்கள் மற்றும் ஸ்ரீ மஹா மாரியம்மன் ஆலய மஹா கும்பாபிஷேக விழா நடைபெற்றது. கணபதி ஹோமம், நவகிரக ஹோமம், குபேரலட்சுமி பூஜைகள் நடைபெற்றது.

இதையடுத்து இரண்டாம் கால யாக பூஜைகளைத் தொடர்ந்து நிகழ்ச்சியின் முக்கிய நிகழ்வான ஸ்ரீ செல்வ கணபதி, ஸ்ரீ செந்தில் பாலமுருகன், ஸ்ரீ பரிவார மூர்த்திகள், ஸ்ரீ மஹா மாரியம்மன் மற்றும் கோபுர கலசத்திற்கு மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. பிறகு ஸ்ரீ மகா மாரியம்மனுக்கு சிறப்பு அபிஷேகங்கள், ஆராதனைகள் நடைபெற்றது. இதில் செந்தில் நகர், இலக்கியம்பட்டி மற்றும் நகரப் பகுதிகளை சேர்ந்த ஏராளமான பக்தர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு அம்மனை வழிபட்டனர்.

இதைத்தொடர்ந்து இரவு மண்ணேசுவரர் மற்றும் உலகநாயகி மஹா மாரியம்மனுக்கு திருக்கல்யாண வைபவம் வெகுவிமரிசையாக நடைபெற்றது. திருக்கோவில் சர்வின் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை கௌரவ தலைவர் குப்புசாமி, தலைவர் செந்தில்குமரன், செயலாளர் பூபதி, பொருளாளர் சித்தேசன், துணைத் தலைவர்கள் கந்தசாமி, ராஜி, துணைச் செயலாளர்கள் கண்ணபிரான், இளங்கோவன், தணிக்கை குழுவினர் அப்பாவு, வடிவேலன் மற்றும் திருக் கோவில் நிர்வாக குழுவினர் ,விழா குழுவினர், ஊர் பொது மக்கள் சிறப்பாக செய்துள்ளார்.



# மக்களின் நம்பிக்கையே நமது பலம்: அமைச்சர் விஜய் தமிழன் பார்த்திபன் பேச்சு!

சேலம், ஆக.25

சேலம் வடமேற்கு மாவட்டம், சங்ககிரி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மகுடஞ்சாவடி பகுதியில் தமிழக வெற்றிக் கழகத்தின் 100 நாள் சாதனை விளக்க பொதுக்கூட்டம் நடைபெற்றது. தமிழக அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் விஜய் தமிழன் பார்த்திபன் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டனர்.கூட்டத்தில் அமைச்சர் விஜய் தமிழன் பார்த்திபன் பேசியதாவது: தமிழக வெற்றிக் கழகத்தின் 100 நாள் சாதனைகளை மக்களிடம் எடுத்துரைக்கும் வகையில் இந்த பொதுக்கூட்டம் நடைபெறுகிறது. மக்கள் நலனை மையமாக கொண்டு செயல்படும் நல்லாட்சியின் சாதனைகளை வீதியெங்கும், மக்களிடமும் எடுத்துரைப்போம்.

மக்களின் நம்பிக்கையே நமது பலம். தமிழக மக்களின் முன்னேற்றத்திற்காக தொடர்ந்து பல்வேறு திட்டங்களை அறிவித்து வரும் முதல்அமைச்சர் ஜோசப் விஜய்யின் கரங்களை அனைவரும் ஒன்றிணைந்து வலுப்படுத்த வேண்டும்.

கழக தலைவர் காட்டிய வழியில் தொடர்ந்து பயணித்து, மக்களுக்கான பல்வேறு நல்ல திட்டங்களை செயல்படுத்துவதில் ஒருங்கிணைந்து செயல்படுவோம். 100 நாள் சாதனை மட்டுமின்றி, வரும் காலங்களில் மேலும் பல்வேறு சாதனைகளை படைக்கும் வகையில் தொடர்ந்து பணியாற்றுவோம்.

இவ்வாறு அவர் பேசினார்.

கூட்டத்தில் சங்ககிரி சட்டமன்ற தொகுதியை சேர்ந்த கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு அமைச்சர் பேச்சை கேட்டனர்.

### அமானிமல்லாபுரத்தில்

# ஐயப்ப சுவாமிகளின் கங்கை பூஜை!

## பக்தி பரவசத்துடன் நடைபெற்ற வீதி உலா!!

தர்மபுரி,ஆக 25

தர்மபுரி மாவட்டம் பாலக்கோடு அருகே உள்ள அமானி மல்லாபுரம் கிராமத்தில், ஐயப்ப சுவாமிகளின் கங்கை பூஜை மற்றும் வீதி உலா நிகழ்ச்சி வெகு விமரிசையாக நடைபெற்றது.

ஓணம் பண்டிகையை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சியில், ஐயப்ப சுவாமிக்கு புனித நீரால் அபிஷேகம் செய்து, மலர் அலங்காரம் மற்றும் சிறப்பு தீபாராதனை நடைபெற்றது.

தொடர்ந்து அலங்கரிக்கப்பட்ட ஐயப்ப சுவாமியின் திருவுருவம் முக்கிய வீதிகள் வழியாக ஊர்வலமாக எடுத்துச் செல்லப் பட்டது.

இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமியை தரிசனம் செய்தனர்.

ஊர்வலத்தின் போது பக்தர்கள் பக்திப் பாடல்கள் பாடியும், சரண கோஷங்கள் எழுப்பியும் வழிபட்டனர்.

வழிநெடுகிலும் பொதுமக்கள் மலர் தூவியும், தீபாராதனை செய்தும் சுவாமியை வழிபட்டனர். கங்கை பூஜை மற்றும் வீதி உலா நிகழ்ச்சியில் திரளான பக்தர்கள் பங்கேற்று, பக்தி பரவசத்துடன் ஐயப்ப சுவாமியை தரிசனம் செய்தனர்.





### வாணியம்பாடியில்

# குடிநீரில் கழிவுநீர் கலப்பதாக குற்றச்சாட்டு - வீடியோ வைரல்!

வாணியம்பாடி, ஆக.25

வாணியம்பாடி நகராட்சிக்கு உட்பட்ட 22வது வார்டு கொல்லத்தெரு பகுதியில் 500க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இந்நிலையில், கடந்த ஒரு மாதமாக நகராட்சி சார்பில் வழங்கப்படும் குடிநீரில் கழிவுநீருடன் மனிதக் கழிவுகளும் கலந்து வருவதாக அப்பகுதி பொதுமக்கள் குற்றம்சாட்டியுள்ளனர். இதனால் குடிநீரை பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும், தண்ணீரை பயன்படுத்துவதால் காய்ச்சல், அலர்ஜி உள்ளிட்ட உடல்நலபாதிப்புகள்ஏற்படுவதாகவும்அவர்கள்வேதனை தெரிவித்தனர். இதுகுறித்து நகராட்சி நிர்வாகத்திடம் பல முறை புகார் அளித்தும், இதுவரை நிரந்தர தீர்வு காணப்படவில்லை என கூறப்படுகிறது. இதையடுத்து, பிரச்சினையை சரிசெய்யும் நடவடிக்கையாக ஒரு பகுதியில் பெரிய அளவிலான குழாய் அமைத்து, முதலில் வரும் தண்ணீரை வெளியேற்றிவிட்டு பின்னர் குடிநீரை பயன்படுத்துமாறு நகராட்சி நிர்வாகத்தினர் அறிவுறுத்தியதாக தெரிகிறது. ஆனால், அதன்பிறகும் குடிநீர் குழாயில் கழிவுநீருடன் மனிதக் கழிவுகள் கலந்து வருவதாக பொதுமக்கள் குற்றம்சாட்டியுள்ளனர். இதற்கிடையே, குடிநீர் குழாயில் கழிவுநீர் மற்றும் மனிதக் கழிவுகள் கலப்பதாக கூறப்படும் காட்சிகள் சமூக வலைத்தளங்களில் வெளியாகி வைரலாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# சேலம் தியாகராஜர் பாலிடெக்னிக் கல்லூரியில் 66வது பட்டமளிப்பு விழா!



சேலம், ஆக.25

சேலம் தியாகராஜர் பாலிடெக்னிக் கல்லூரியின் 66வது பட்டமளிப்பு விழா கல்லூரி வளாகத்தில் உள்ள ஸ்ரீ வள்ளியப்பா அரங்கில் நடைபெற்றது. சோனா கல்விக்குழுமங்களின்தலைவர்சொ.வள்ளியப்பா தலைமை வகித்தார்.

மதுரை பாரமவுண்ட் டெக்ஸ்டைல் மில்ஸ் நிறுவனத்தின் நிறுவனர் லக்ஷ்மி முருகேசன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, முதல் 5 இடங்களை பெற்ற 55 மாணவமாணவியர் உள்பட 692 பேருக்கு பட்டயச் சான்றிதழ்களை வழங்கி வாழ்த்தினார்.

கல்லூரி முதல்வர் முனைவர் அ.கனகராஜ் பேசுகையில், மாணவர்களுக்கு ஆண்டுக்கு ரூ.8.5 லட்சம் ஊதியம் கிடைக்கும் வகையில் பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். மேலும் 450க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு 120க்கும் மேற்பட்ட முன்னணி தொழில் நிறுவனங்களில் ஆண்டுக்கு ரூ.5 லட்சம் வரை ஊதியத்தில் வேலைவாய்ப்பு கிடைத்துள்ளதாகவும் கூறினார்.

மேலும், 100க்கும் மேற்பட்ட முன்னணி தொழில் நிறுவனங்களுடன் இணைந்து மாணவர்களுக்கு தொழில் துறை சார்ந்த பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

கல்லூரி இயக்குனர் முனைவர் வி. கார்த்திகேயன் பேசுகையில், தொழில்நுட்ப கல்வி, கட்டமைப்பு வசதிகள், திறன் பயிற்சி, காப்புரிமை மற்றும் ஆராய்ச்சி ஆகியவற்றில் கல்லூரி முன்னோடியாக திகழ்வதாக தெரிவித்தார். மாணவர்கள் தங்களது அறிவு மற்றும் திறமைகளை தொடர்ந்து மேம்படுத்தி, வளர்ந்து வரும் தொழில்நுட்பத்துக்கு ஏற்ப புதுமையான கண்டுபிடிப்புகளில் ஆர்வம் காட்ட வேண்டும் என அறிவுறுத்தினார்.

கல்லூரி துணைத்தலைவர்கள் சொக்கு வள்ளியப்பா, தியாகு வள்ளியப்பா ஆகியோரும் மாணவர்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்தனர். கல்லூரி தலைவர் சொ. வள்ளியப்பா பேசுகையில், 68 ஆண்டுகளாக சிறப்பான கல்வியை வழங்கி வரும் கல்லூரி, பல்லாயிரக்கணக்கான குடும்பங்களின் பொருளாதார வளர்ச்சிக்கு வழிகாட்டியுள்ளதாக பெருமிதம் தெரிவித்தார்.

விழாவில் 692 மாணவமாணவியர் தங்களது பெற்றோருடன் கலந்து கொண்டு பட்டயச் சான்றிதழ்களை பெற்றனர். பின்னர் அவர்கள் கல்லூரி நிர்வாகிகள், முதல்வர், துறைத்தலைவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு நன்றி தெரிவித்தனர்.



### வாணியம்பாடி அருகே

# 5,000 பனை விதைகள், 500 மரக்கன்றுகள் நடும் விழா!

வாணியம்பாடி, ஆக.25

திருப்பத்தூர் வாணியம்பாடி அருகே பூங்குளம் கிராமம் வனப்பகுதியில் ஆலங்காயம் வனத்துறை, இயற்கை அரண்கள் குழு ஆகியோர் இணைந்து 5000 பனை விதைகள் மற்றும் 500 மரக் கன்றுகள் நடும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு ஆலங்காயம் வனசரக அலுவலர் கே.சேகர் தலைமை வகித்தார். வானவர் ஏ.வெங்கடேசன், அரசு மருத்துவர் ஜனார்தன், வேர்கள் அறக்கட்டளை தலைவர் வடிவேல் சுப்பிரமணியன், ஆனந்தன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இயற்கை அரண்கள் குழு தலைவர் தமிழ்வாணன் அனைவரையும் வரவேற்றார். இதில் சிறப்பு அழைப்பாளராக பூங்குளம் ஊராட்சி மன்ற தலைவர் அஞ்சலி தினகரன் கலந்துகொண்டு

இயற்கையை காப்போம்.. எதிர்காலத்தை உருவாக்குவோம்! என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.பின்னர் பனை விதைகள் மற்றும் மரக்கன்றுகள் நடும் விழாவை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் இயற்கை ஆர்வலர் ஏ. வேலு, பசுமை தாயகம் அறக்கட்டளை நிறுவன தலைவர் மு.பெ.சத்யராஜ், நம் மக்களின் குரல் நிறுவனர் ராதா கிருஷ்ணன்,குழு உறுப்பினர்கள், விவசாய சங்கத்தினர், திருப்பத்தூர் தூய நெஞ்ச கல்லூரி பேராசிரியர்கள்,

மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டு 5000 பனை விதைகள் மற்றும் 500 மரக்கன்றுகள் நட்டனர்.முடிவில் பசுமை தாயகம் அறக்கட்டளை தலைவர் என்.செங்குட்டுவன் நன்றி கூறினார்.

இயற்கையை பாதுகாப்பதுடன், எதிர்கால தலைமுறைக்கு பசுமையான சூழலை உருவாக்கும் நோக்கில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சி, பொதுமக்களிடையே சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அமைந்தது.

### மளிகை கடையில்

# தடை செய்யப்பட்ட போதைப்பொருட்கள் விற்பனை செய்த இளைஞர் கைது!

ஆம்பூர், ஆக.25

ஆம்பூர் அடுத்த சாத்தம்பாக்கம் பகுதியில் மளிகை கடையில் அரசால் தடை செய்யப்பட்ட போதைப்பொருட்கள் பதுக்கி வைத்து விற்பனை செய்யப்படுவதாக உமராபாத் போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து போலீசார் அப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டனர். அப்போது, ராஜேந்திரன் மகன் தினேஷ்கு



மாருக்கு சொந்தமான மளிகை கடையில் தடை செய்யப்பட்ட போதைப்பொருட்கள் பதுக்கி வைத்து விற்பனை செய்யப்படுவது தெரியவந்தது.

இதைத்தொடர்ந்து போலீசார் கடையில் சோதனை மேற்கொண்டதில் 9 கிலோ ஹான்ஸ் பாக்கெட்டுகள் மற்றும் 1 கிலோ கூலிப் பாக்கெட்டுகள் என மொத்தம் 10 கிலோ தடை செய்யப்பட்ட போதைப்பொருட்களை பறிமுதல் செய்தனர். இதையடுத்து தினேஷ்குமாரை உமராபாத் போலீசார் கைது செய்து, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர். தடை செய்யப்பட்ட போதைப்பொருட்கள் விற்பனையை தடுக்க போலீசார் தொடர்ந்து கண்காணிப்பு மற்றும் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

### கூடலூரில்

# 2 நாள் கடையடைப்பு, பொது வேலைநிறுத்தம்!



கூடலூர், ஆக.25

லாரஸ்டன் நம்பர் 4 பகுதியில் கடந்த 10 நாட்களில் புலி தாக்கி இருவர் உயிரிழந்த சம்பவத்தைத் தொடர்ந்து, கூடலூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் சமூக அமைப்புகளின் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.


திமுக கூடலூர் நகரச் செயலாளர் ச. இளஞ்செழியன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பல்வேறு கட்சிகள், வியாபாரிகள் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில், புலி தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டதுடன், ஆட்கொல்லி புலியை சுட்டுப் பிடிக்க வேண்டும் என்றும், போராட்டத்தில் கைது செய்யப்பட்ட 7 பேரையும் விடுதலை செய்து வழக்குகளைத் திரும்பப்பெறவேண்டும்என்றும்தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மேலும், ஆகஸ்ட் 27ம் தேதி காலை 6 மணி முதல் ஆகஸ்ட் 29ம் தேதி காலை 6 மணிவரைகூடலூர்சட்டமன்றத்தொகுதி முழுவதும் கடையடைப்பு மற்றும் பொது வேலைநிறுத்தப் போராட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டது. இதற்கு அனைத்து வியாபாரிகள், தொழிலாளர்கள், வாகன உரிமையாளர்கள், ஓட்டுநர்கள் மற்றும் சமூக அமைப்புகள் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என கூட்டத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டது.

### ஐயா கிணறு காணோம்; கேத்தி பஞ்சாயத்து அதிகாரிகள் அதிர்ச்சி

# வடிவேலு காமெடி பாணியில் செய்து காட்டிய நிலத்தின் உரிமையாளர்





நீலகிரி,ஆக 25

நீலகிரி மாவட்டம் குன்னூர் வட்டம் கேத்தி பஞ்சாயத்திற்கு உட்பட்ட காந்திநகர் பகுதியில் [FUNCI TYLOGU]என்பவர்சட்டவிரோதமாக கிணறுவெட்டியது தொடர்பாக. முதலில் சட்டவிரோதமாக தண்ணீருக்காக கிணறு தோண்டி கிணற்றில் பாறைமாட்டியதும்அந்தகிணற்றை கல்லு போட்டு மூடி தண்ணிக்காக பாடு பட்ட உரிமையாளர் அதிகாரிகளுக்கே தண்ணி காட்டி இரண்டாவது கிணறு வெட்டும் பணியை துவக்கி 40 அடி சென்று விட்டது. ஆனால் இதற்கும் அவர் முறையாக அனுமதி வாங்கவில்லை. சட்டவிரோத பணிகளை செய்வதே இவரின் பணி. இதுகுறித்து நமது செய்தியாளர்கள் கேத்தி (EO)செயல் அலுவலர் அவர்களிடம் தெரிவித்தும் எந்த ஒரு பயனும் இல்லை.. அதிகாரி மௌனம் காட்டுவது ஏன் ?


அதிகாரிகளுக்கு தெரிந்து தான் இந்த சட்டவிரோத பணிகள் நடைபெறுகிறதா ? என சமூக ஆர்வலர்கள் கேள்வி விடை கிடைக்குமா ?

தினகனி

NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253

25.08.2026

# தமிழ்நாடு கார்டியாக் எலக்ட்ரோபிசியாலஜி மாநாடு சென்னையில் நடைபெற்றது




சென்னை, ஆகஸ்ட் 25 இதயத் துடிப்பு கோளாறுகள் குறித்த நவீன மருத்துவத்தில் உலகளாவிய கவனத்தை ஈர்த்த'தமிழ்நாடுஇதயமின்உடலியங்கியல் மாநாடு 2026 சென்னையில்வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளது. இதய லய சிகிச்சையில் முன்னணி நிபுணர்கள், பல வெளிநாடுகளைச் சேர்ந்த பேராசிரியர்கள், இதயவியல் மருத்துவர்கள் மற்றும் மாணவர்கள் உட்பட, இந்தியா முழுவதும் இருந்தும், இலங்கை, மொரிஷியஸ், ஆஸ்திரேலியா, இங்கிலாந்து மற்றும் கனடா உள்ளிட்ட நாடுகளில் இருந்தும் 300க்கும் மேற்பட்ட மருத்துவ நிபுணர்கள் இதில்பங்கேற்றனர். மாநாட்டில்தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவர் ஜெ. சி. டி. பிரபாகரன், கலந்து கொண்டார் சட்டமன்றப் பேரவைத் தலைவர் தனது உரையில், "மேம்பட்ட இதயத் துடிப்பு மருத்துவத்தில் சென்னை ஒரு முக்கிய மையமாக உருவெடுத்து வருவது பெருமிதமளிக்கிறது. புதிய கண்டுபிடிப்புகளைப் பகிர்ந்துகொள்ளவும், இதய சிகிச்சையை வலுப்படுத்தவும், ஒரு சிறந்த தளத்தை இம்மாநாடு வழங்குவது மகிழ்ச்சியளிக்கிறது. இந்தியா மற்றும் உலகெங்கிலும் உள்ள நிபுணர்களை ஒரே தளத்தில் ஒருங்கிணைத்து பயனுள்ள விவாதங்களை சாத்தியமாக்கியிருக்கும் மாநாட்டு ஏற்பாட்டாளர்களுக்கு எனது பாராட்டுக்கள்" என்று கூறினார். இந்நிகழ்வின் குழுத் தலைவராக டாக்டர் கே. ஜெயசங்கரும், அறிவியல் குழுவின் தலைவராக டாக்டர் பி. வி. சஞ்சாயும் செயல்பட்டனர். மாநாட்டின் அமைப்புச் செயலாளர் டாக்டர் தீப் சந்த் ராஜா எஸ். ஆகியோர் செயல் பட்டனர்..



மாண்புமிகுஇயற்கைவளங்கள்துறைஅமைச்சர்டாக்டர்டிகே.பிரபுஅவர்கள்,இன்றைய தினம் (22.08.2026) சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட மகளிர் காவல் நிலையம் அருகில், சமூக நீதித்துறையின் சார்பில், சமூக நீதி கல்லூரி விடுதியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ப.ஆகாஷ், இ.ஆ.ப., அவர்கள், தலைமையில் திறந்து வைத்து பார்வையிட்டனர்.

# ஈஷா யோகா மையம் நடத்தும் 18வது கிராமோத்சவம் பாரதத்தின் மாபெரும் கிராமப்புற விளையாட்டு திருவிழா



கடலூர், ஆக. 25 கடலூர் மஞ்சக்குப்பம் அண்ணா விளையாட்டு மைதானத்தில் 23.08.2026 காலை 10 மணிக்கு துவங்கி நாக் அவுட் முறையில் நடைபெற்றது இதில்திருச்சி, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், பெரம்பலூர், அரியலூர், கடலூர், கள்ளக்குறிச்சி, விழுப்புரம், புதுச்சேரி, திருவண்ணாமலை, போன்ற மாவட்டங்களின்கிராமபுறத்தில் இருந்து 16அணிகள் பங்கேற்று அதில் திருவண்ணாமாலை மாவட்டத்தை சேர்ந்த தென்பள்ளிப்பட்டு அணியும், புதுச்சேரி மாவட்டத்தை சேர்ந்த குமாரப்பாளையம் வாரியர்ஸ் அணியும் இறுதி போட்டியில் மோதின இதில் குமாரப்பாளையம் வாரியர்ஸ் அணி முதலிடம் பிடித்து 15ஆயிரம் பரிசுத்தொகை வென்றனர், இந்த தொடரின் சிறந்த வீராங்கனைக்கான 1.40ஆயிரம் மதிப்புள்ள Gravton நிறுவன QUANTA Limited Edition Electric vehicle மோட்டார் சைக்கிள் பரிசு குமாரப்பாளையம் வாரியர்ஸ் அணியின் வீராங்கனை கா.காயித்ரி பெற்றார்.

தென்பள்ளிப்பட்டு அணி இரண்டாவது இடம் பிடித்து 12ஆயிரம் பரிசுத்தொகை வென்றனர். இவ்விழாவின் சிறப்பு விருந்தினராக கடலூர் மாவட்ட தலைமை நீதிபதி கலந்து கொண்டு பரிசு சான்றிதழ்களை வழங்கினார், குமாரப்பாளையம் மல்டி ஸ்போர்ட்ஸ் அக்காடமி பவுண்டர் சோமசுந்தரம், காப்பாளர் ஜெயசங்கர் உடன் இருந்தனர். மேற்கண்ட முதல் இரண்டு இடங்களை பிடித்த அணிகளும் செப்டம்பர் 0506 ஆம் தேதிகள் கோவை ஈஷா மையம் ஆதியோகி சிலை முன் நடைபெறும் 5லட்சம் பரிசு தொகை இறுதி போட்டிக்கு தகுதி பெற்றுள்ளனர். ஈஷா யோகா மையம் நடந்தும் கிராமோத்சவம் விளையாட்டு திருவிழா மூலம் கிராமப்புற பெண்கள் விளையாட்டு ஊக்குவிக்கப்பட்டதனால் இன்று புதுச்சேரி மாநில குமாரப்பாளையம் வாரியர்ஸ் வீராங்கனைகளின் வளர்ச்சி கிராமப்புற பெண்கள் விளையாட்டின் ஒரு மைல்கல்லாக விளங்குகிறது.

# இன்றைய ராசி பலன்கள் (25.08.2026)

**மேஷம்**: இன்று நாள் முழுவதும் உற்சாகம் நிறைந்திருக்கும். தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொழில் மற்றும் வியாபாரத்தில் புதிய வாய்ப்புகள் தேடிவரும்.

**ரிஷபம்**: குடும்பத்தில் மகிழ்ச்சியும் சுபச் செய்திகளும் வந்து சேரும். நிதி நிலைமை சீராக இருக்கும். மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும்.

**மிதுனம்**: பேச்சில் நிதானம் தேவை. தேவையில்லாத வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. பிற்பகலுக்கு மேல் எதிர்பார்த்த நல்ல தகவல்கள் வரக்கூடும்.

**கடகம்**: திட்டமிட்ட வேலைகளை எளிதாக முடிப்பீர்கள். பண வரவு திருப்திகரமாக இருக்கும். நண்பர்கள் மற்றும் உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**சிம்மம்**: புதிய முயற்சிகளுக்கு சாதகமான நாள். தொழில் வளர்ச்சி அடையும். கடன் பிரச்சனைகள் குறைய வாய்ப்புள்ளது. ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள்.

**கன்னி**: நீண்ட நாட்களாக தடைபட்ட காரியங்கள் சிறப்பாக முடிவடையும். பணியிடத்தில் பாராட்டுக்கள் கிடைக்கும். குடும்பத்தில் அனுகூலமான சூழல் நிலவும்.

**துலாம்**: சுபச் செலவுகள் ஏற்படக்கூடும். பயணங்கள் செல்ல நேரிடலாம். மனதில் அமைதியும் தெளிவும் உண்டாகும். நிதானமாகச் செயல்படுவது நல்லது.

**விருச்சிகம்**: பொருளாதார ரீதியாக சிறப்பான நாள். எதிர்பாராத தனலாபம் கிடைக்கும். தொட்ட காரியங்கள் அனைத்திலும் வெற்றி உண்டாகும்.

**தனுசு**: உத்தியோகத்தில் பொறுப்புகளும் முன்னேற்றமும் கூடும். புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும். தந்தையின் வழியில் ஆதாயம் உண்டாகும்.

**மகரம்**: ஆன்மீக காரியங்களில் ஈடுபாடு அதிகரிக்கும். தொலைதூரச் செய்திகள் அனுகூலமாக இருக்கும். தொழில் ரீதியான அலைச்சல் குறையும்.

**கும்பம்**: வாகன பயணங்களில் எச்சரிக்கை தேவை. அறிமுகம் இல்லாதவர்களிடம் கவனமாகப் பழகுவது நல்லது. மாலையில் நல்ல மாற்றம் உண்டாகும்.

**மீனம்**: கணவன்மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். கூட்டு வியாபாரத்தில் லாபம் ஈட்டுவீர்கள். பிரிந்த நண்பர்கள் மீண்டும் இணைய வாய்ப்புள்ளது.




கோவை சலீவன் வீதியில் உள்ளமாரன்னகவுண்டர் பள்ளியில் மாணவர்களுக்குசாலை பாதுகாப்புமற்றும் சாலைவிதிகளை பற்றியும் விழிப்புணர்வுபள்ளிமுதல்வர் மற்றும் ஆசிரியர்கள் மு ன்னிலையில் வெரைட்டி ஹால் போக்குவரத்துகாவல் உதவிஆய்வாளர் ரஞ்சன் மற்றும் தலைமைகாவலர் அருணகிரிசந்தோஷ் ஆகியதலைமையில் சாலை பாதுகாப்புவிழிப்புணர்வுநடத்தப்பட்டது

# "பயப்படாம விளையாடுங்க புரோ.." இலங்கை கேப்டனை ஸ்லெட்ஜ் செய்த சர்பராஸ்.. அடுத்த பந்தே அவுட்



இலங்கைக்கு எதிரான 2வது டெஸ்ட் போட்டியில் இந்திய வீரர் சர்பராஸ் கான், இலங்கை கேப்டன் டி சில்வாவை ஸ்லெட்ஜ் செய்த நிலையில், அடுத்த பந்திலேயே அவர் கேட்ச் கொடுத்து ஆட்டமிழந்த சம்பவம் சமூக வலைதளங்களில் பேசுபொருளாகியுள்ளது. சுப்மன் கில் தலைமையிலான இந்திய அணி இலங்கையில் சுற்றுப்பயணம் செய்து 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. காலேவில் நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 165 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்நிலையில், இரு அணிகளுக்கும் இடையேயான 2வது டெஸ்ட் போட்டி கொழும்பில் நடைபெற்று வருகிறது. டாஸ் வென்று முதலில் பேட்டிங் செய்த இந்திய அணி, தேவ்தத் படிக்கல் 117 ரன்களும், துருவ் ஜூரெல் ஆட்டமிழக்காமல் 115 ரன்களும் எடுத்ததன் மூலம் 9 விக்கெட் இழப்புக்கு 503 ரன்கள் குவித்து டிக்ளேர் செய்தது. இதையடுத்து முதல் இன்னிங்ஸை தொடங்கிய இலங்கை அணி, 2ம் நாள் ஆட்டநேர முடிவில் 8 ரன்களுக்கு 2 விக்கெட்டுகளை இழந்திருந்தது. தொடர்ந்து 3ம் நாள் ஆட்டத்தில் இந்திய பந்துவீச்சாளர்களை எதிர்கொள்ள முடியாமல் தடுமாறிய இலங்கை அணி, ஆட்டநேர முடிவில் 8 விக்கெட்டுகளை இழந்து 265 ரன்கள் எடுத்துள்ளது. இந்த நிலையில், இந்திய அணியின் விக்கெட் கீப்பர் ரிஷப் பந்துக்குப் பதிலாக மாற்று வீரராக களமிறங்கிய சர்பராஸ் கான், ஷார்ட்லெக் பகுதியில் பீல்டிங் செய்துகொண்டிருந்தார். அப்போது இலங்கை கேப்டன் தனஞ்செய டி சில்வாவை சர்பராஸ் தொடர்ந்து ஸ்லெட்ஜ் செய்தார். 35வது ஓவரின் 3வது பந்தை பவுண்டரிக்கு விரட்டிய டி சில்வா, அடுத்த பந்தை எதிர்கொள்வதற்கு முன்பு பீல்டிங் அமைப்பை கவனித்தபடி சிறிது நேரம் எடுத்துக்கொண்டார். அப்போது சர்பராஸ் கான், "புரோ, அங்கே ஒன்றுமில்லை. நேராக பார்த்து விளையாடுங்கள். ஏன் இடதுபக்கமும் வலதுபக்கமும் பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள்? பயப்படாதீங்க... தைரியமாக விளையாடுங்க..." என கூறியதாக தெரிகிறது. சர்பராஸ் கானின் இந்த மைண்ட் கேமுக்கு பிறகு, அதே ஓவரில் தனஞ்செய டி சில்வா கேட்ச் கொடுத்து 8 ரன்களில் ஆட்டமிழந்தார். முதல் டெஸ்ட் போட்டியில் இலங்கை வீரர் நிரோஷன் டிக்வெல்லாவை ஸ்லெட்ஜ் செய்து விக்கெட் வீழ்த்த ஜெய்ஸ்வால் முக்கிய பங்கு வகித்தநிலையில், தற்போது அதே பாணியில் சர்பராஸ் கானும் இலங்கை கேப்டனின் விக்கெட்டை வீழ்த்த முக்கிய பங்காற்றியிருப்பது கிரிக்கெட் ரசிகர்கள் மத்தியில் பேசுபொருளாகியுள்ளது.

# கனிஸ்சா ஓபன் செஸ்: இந்திய வீரர் சாம்பியன்



கனிஸ்சா ஓபன் செஸ் போட்டி ஹங்கேரியில் நடந்தது. கனிஸ்சா ஓபன் செஸ் போட்டியில் நேற்று நடந்த 9வது மற்றும் கடைசி ரவுண்டில் இந்திய கிராண்ட்மாஸ்டர் பிரனேஷ், ஜெர்மனியின் வாடிம் பெட்ரோவ்ஸ்கி ஆகியோ மோதினர். இந்த ஆட்டத்தில் சிறப்பாக செயல்பட்ட பிரனேஷ், வாடிம் பெட்ரோவ்ஸ்கியை வீழ்த்தி 7 புள்ளிகளுடன் முதலிடத்தை பிடித்து சாம்பியன் பட்டத்தை வசப்படுத்தினார். 19 வயதான பிரனேஷ் காரைக்குடியை சேர்ந்தவர்.

# களத்தில் மோதிக்கொண்ட ஜெய்ஸ்வால், அசிதாவுக்கு அபராதம்




இலங்கை அணிக்கு எதிரான டெஸ்டில் இந்திய தொடக்க ஆட்டக்காரர் ஜெய்ஸ்வால் முதல் நாள் ஆட்டத்தின் போது 45 ரன்களில், இலங்கை வேகப்பந்து வீச்சாளர் அசிதா பெர்னாண்டோவின் பந்தில் போல்டானார். அவர் ஆட்டமிழந்ததும் அவரை நோக்கி இலங்கை வீரர்கள் ஏதோ சொல் ஆவேசமடைந்த ஜெய்ஸ்வால், அசிதா பெர்னாண்டோவிடம் நெருக்கமாக வந்து கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். ஜெய்ஸ் லின் ஹெல்மெட் அவரது நெற்றியில் லேசாக இடித்தது. சம்பவம் குறித்து விசாரித்த சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) வருக்கும் போட்டி கட்டணத்தில் இருந்து 25 சதவீதம் அபராதமும். ஒரு தகுதி இழப்பு புள்ளியும் நேற்று விதித்தது.

இதற்கிடையே இந்த விவகாரம் குறித்து ஜெய்ஸ்வால் வெளியிட்ட இன்ஸ்டாகிராம் பதிவில், 'அவர் என்ன சொன்னார் என்பது உங்களுக்கு தெரியாவிட்டால் தயவு செய்து நீங்களாக எந்த முடிவும் எடுத்து பேசாதீர்கள். யாராவது தங்களது வரம்பை மீறினால் இதியா தக்க பதிலடி கொடுக்கும் என்பதை அவர்களுக்கு உணர்த்த வேண்டும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

# டாப்ஸி பன்னு நடித்த 'காந்தாரி' படத்தின் டிரெய்லர் வெளியானது




நடிகை டாப்ஸி பன்னு நடிப்பில் உருவாகியுள்ள 'காந்தாரி' திரைப்படம் வரும் செப்டம்பர் 3ம் தேதி நெட்பிளிக்ஸ் ஓடிடி தளத்தில் வெளியாக உள்ளது. ஆக்ஷன் மற்றும் உணர்வுப்பூர்வமான கதைக்களத்தில் உருவாகியுள்ள இப்படத்தின் டிரெய்லர் தற்போது வெளியாகி உள்ளது. தமிழில் வெளிவந்த 'ஆடுகளம்' படத்தின் மூலம் ரசிகர்களின் மனதை கொள்ளை கொண்டவர் டாப்ஸி பன்னு. இவர் தமிழ் மட்டுமல்லாமல் இந்தியிலும் பல படங்களில் நடித்து வருகிறார். தற்போது 2 ஹிந்தி படங்களில் பணியாற்றி வருகிறார். நாயகிகளுக்கு முக்கியத்துவம் கொண்ட கதைகளை தேர்வு செய்து நடித்த வருகிறார். தற்போது, கற்பனையான ஜெய்புரா என்ற நகரத்தை பின்னணியாகக் கொண்ட இப்படத்தில், பானி என்ற கதாபாத்திரத்தில் டாப்ஸி நடித்துள்ளார். தனது மகளைத் தேடி செல்லும் அவரது பயணம் பல்வேறு ஆபத்துகளையும்எதிர்பாராதசவால்களையும்சந்திப்பதாக கதை அமைந்துள்ளது. 'காந்தாரி' படத்தை தேவாஷிஷ் மக்கிஜா இயக்கியுள்ளார். கனிகா தில்லான் இப்படத்தை எழுதி தயாரித்துள்ளார். இப்படத்தில் இஷ்வாக் சிங், சாயா கடம், ஸ்வஸ்திகா முகர்ஜி, மீதா வசிஷ்ட், ஜதின் சர்னா உள்ளிட்டோரும் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இந்தப் படம் நேரடியாக நெட்பிளிக்ஸ் ஓடிடியில் செப்டம்பர் 3ஆம் தேதி வெளியாகுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், இந்த படத்தின் டிரெய்லர் தற்போது வெளியாகி உள்ளது. இந்த டிரெய்லர் ரசிகர்கள் மத்தியில் கவனத்தை பெற்று வருகிறது.

# சூரியின் அடுத்த சம்பவம்... 'மண்டாடி' படத்தின் அதிரடி டீசர் இதோ!




இயக்குநர் மதிமாறன் இயக்கத்தில் சூரி, சுஹாஸ் இணைந்து நடித்துள்ள 'மண்டாடி' படத்தின் அதிரடி டீசர் வெளியாகி உள்ளது. இந்த டீசர் மக்கள் மத்தியில் கவனத்தை பெற்று வருகிறது. தமிழ் சினிமாவில் ஆரம்பத்தில் காமெடி கதாபாத்திரங்களில் நடித்து வந்த சூரி, தற்போது கதாநாயகனாக நடித்து வருகிறார். அந்த வகையில், கருடன், விடுதலை, கொட்டுக்காளி , மாமன் ஆகிய படங்களின் வெற்றியை தொடர்ந்து தற்போது 'மண்டாடி' என்ற திரைப்படத்தில் சூரி கதாநாயகனாக நடித்துள்ளார். இந்த படத்தை இயக்குநர் மதிமாறன் இயக்கியுள்ளார். நாகை மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்களின் வாழ்க்கை மற்றும் படகுப் போட்டிகளை மையமாகக் கொண்டு உருவாகியுள்ள இப்படத்தில் மகிமா நம்பியார் கதாநாயகியாக நடித்துள்ளார். 'கலர் போட்டோ', 'ரைட்டர்பத்மபூஷண்', 'அம்பாஜிபேட்டாமேரேஜ்பேண்ட்' உள்ளிட்ட படங்களில் நடித்து பிரபலமான தெலுங்கு நடிகர் சுஹாஸ், 'மண்டாடி' படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். இப்படத்திற்கு ஜி.வி. பிரகாஷ் குமார் இசையமைத்துள்ளார். நடிகர்கள் சத்யராஜ், மஹிமா நம்பியார், மிதுன் ஜெய்சங்கர், ரவீந்திர விஜய், பால சரவணன், ஸ்டன்ட் சிவா உள்ளிட்டோர் நடித்துள்ளனர். தமிழ், தெலுங்கு, இந்தி ஆகிய மொழிகளில் உருவாகியுள்ள இப்படம் செப்டம்பர் 10ம் தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ளது. ஏற்கனவே இந்த படத்திலிருந்து "மண்டாடி மண்டாடி", "உசுரே நீதான் புள்ள" என்ற பாடல்கள் அடுத்தடுத்து வெளியாகி படத்தின் மீதான எதிர்பார்ப்பை அதிகரிக்க செய்தன. இந்த படம் வெளியாக இன்னும் சில நாட்களே உள்ள நிலையில், மத்திய தணிக்கை வாரியம் இந்த படத்திற்கு "யு/ஏ" சர்டிபிகேட் வழங்கியுள்ளது. எனவே இந்த படத்தை சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும்தாராளமாகத்திரையரங்குகளில்பார்க்கமுடியும். 12வயதுக்கும்குறைவானகுழந்தைகள்பார்க்கும்போதுபெற்றோர்கள் அருகில் இருந்து வழிகாட்டுவது நல்லது. இந்த நிலையில், படத்தின் வெளியீட்டிற்காக ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்து காத்திருந்த நிலையில், தற்போது இந்த படத்தின் அதிரடி டீசர் வெளியாகி உள்ளது. இந்த டீசர் படத்தின் மீதான எதிர்பார்ப்பை மேலும் அதிகரிக்க செய்துள்ளது.

# கார்த்தி நடித்த 'சர்தார் 2' படத்தின் பர்ஸ்ட் சிங்கிள் வெளியீடு

கார்த்தியின் 'சர்தார் 2' படத்தின் முதல் பாடலான 'மயில்வீரா' என்ற பாடல் தற்போது வெளியாகி உள்ளது. இந்த பாடலை ஆஃப்ரோ, வாஹீசன் ராசையா மற்றும் முகேஷ் ஆகியோர் இணைந்து பாடியுள்ளனர்.

தமிழ் சினிமாவின் முன்னணி நடிகர்களில் ஒருவரான கார்த்தி நடிப்பில் உருவாகி வரும் திரைப்படம் 'சர்தார் 2'. பி.எஸ். மித்ரன் இயக்கத்தில் கடந்த 2022ம் ஆண்டு வெளியான 'சர்தார்' திரைப்படம் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்ற நிலையில், தற்போது அதன் இரண்டாம் பாகம் உருவாகி வருகிறது. 'சர்தார் 2' படத்தில் கார்த்தியுடன் எஸ்.ஜே. சூர்யா, மாளவிகா மோகனன், ஆஷிகா ரங்கநாத், ரஜிஷா விஜயன் உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். பிரின்ஸ் பிக்சர்ஸ் நிறுவனம் இப்படத்தை தயாரித்துள்ளது. இப்படத்திற்கு சாம் சி.எஸ். இசையமைத்துள்ளார். சாம் சி.எஸ். இசையமைக்கும் 100வது திரைப்படம் 'சர்தார் 2' என்பதால், படத்தின் இசை மீதும் ரசிகர்களிடையே கூடுதல் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில், 'சர்தார் 2' படத்தின் முதல் பாடலாக 'மயில்வீரா' பாடல் தற்போது வெளியாகியுள்ளது. தமிழ் கடவுளான முருகனை மையமாக வைத்து உருவாக்கப்பட்டுள்ள இந்த பாடல், பக்தி கலந்த இசையுடன் அமைந்துள்ளது. 'மயில்வீரா' பாடலை ஆஃப்ரோ, வாஹீசன் ராசையா மற்றும் முகேஷ் ஆகியோர் இணைந்து பாடியுள்ளனர். பாடல் வரிகளையும் ஆஃப்ரோ மற்றும் வாஹீசன் ராசையா இணைந்து எழுதியுள்ளனர். பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள 'சர்தார் 2' திரைப்படம் வருகிற செப்டம்பர் 10ந் தேதி உலகம் முழுவதும் உள்ள திரையரங்குகளில் வெளியாக உள்ளது. முதல் பாகத்தின் வெற்றியை தொடர்ந்து உருவாகி வரும் இப்படத்திற்கு ரசிகர்கள் மத்தியில் எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.